Date: 03.12.21 C.C.No. 48 /2020

அ.சா.2 பூமிநாதன் மனுவின்பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை:

நான், அ.சா.1 பூமாலை, சத்தியா, அமராவதி, தங்கராஜ், பஞ்சு அனைவரும் சேர்ந்து 16.05.17ம் தேதியன்று இரவு 8 மணிக்கு ஆஜர் எதிரியின் சகேதாரர் முருகதாஸ் மற்றும் எதிரியின் தாயார் சந்தோசம் ஆகியோரை தாக்கியதன்பேரில் அவர்கள் மேலூர் அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சைபெற்று அதன்பேரில் மேற்படி எங்கள் அணைவரின்மீதும் குற்ற எண். 173-17 என்று வழக்கு மேலவளவு காவல் நிலையத்தில் புணையப்பட்டு பிணையில் வந்துள்ளோம் என்றால் இல்லை. கைலம்பட்டியிலிருந்து மேலூர் வரவேண்டுமானால் தும்பைப்பட்டி அல்லது மேலவளவு வழியாகத்தான் வரவேண்டும் என்றால் சரிதான். என்மீது குற்ற எண். 173-17 என்று வழக்கு மேலவளவு காவல் நிலையத்தில் புணையப்பட்டு நிலுவையில் உள்ளது என்றால் சரியல்ல. எங்கள் ஊரில் வரும் தார் ரோடு கிழக்கு மேற்காக செல்கிறது என்றால் சரிதான். தார் ரோட்டிற்கு தெற்கு பக்கத்தில் என் வீடு உள்ளது என்றால் சரிதான். முருகதாஸ் வீட்டிற்கும் அதற்கு கிழக்கே உள்ள பஞ்சு என்பவரின் வீட்டிற்கு இடையில் தென்வடலாக செல்லும் பாதையிலதான் என் வீட்டிற்கு செல்லவேண்டும் என்றால் சரிதான். பஞ்சு மற்றும் முருகதாஸ் வீடு எனக்கு தெரியும் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் போட்டோவில் இருப்பது முருகதாஸ் மற்றும் பஞ்சு வீடு என்றால் சரிதான். அந்த புகைப்படம் எ.சா.ஆ.1 ஆகும். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் முருகதாஸ் வீட்டிற்கும் பஞ்சு வீட்டிற்கும் உள்ள பாதையில் கட்டப்பட்டுள்ள பாத்ரூம் பஞ்சு அவர்களால் கட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். முருகதாஸ் வீட்டிற்கும் பஞ்சு வீட்டிற்கும் இடையிலுள்ள பாதையின் அகலம் 1மீட்டர், அதற்கு தெற்கே உள்ள பாதையின் அகலம் எவ்வளவு என்றால் 3 மீட்டர் என்றால் சரிதான். அந்த ஆக்கிரமிப்பை எடுக்கச்சொல்லி முருகதாஸ் வட்டாட்சியர், மாவட்ட ஆட்சியரிடம் மனு கொடுத்துள்ளார் என்றால் அவர் மட்டும் தனியாக கொடுத்திருக்கலாம். முருகதாஸ் வீடு பாதை எடுக்கச்சொல்லியதால் அவர்மீது எனக்கு கோபம் என்றால் இல்லை. ரோட்டின் தெற்கு பக்கம் முருகதாஸ் வீடு உள்ளது என்றால் சரிதான். அதற்கு தெற்கே ஜெகநாதன் காலி இடம் உள்ளது என்றால் சரிதான். அதற்கும் தெற்கே சத்தியாவின் சென்ட்டிரிங் வீடு உள்ளது என்றால் சரிதான். சத்தியா வீட்டிற்கு தெற்கே மகாராஜாவின் ஓட்டு வீடு உள்ளது என்றால் சரிதான். மகராஜா வீட்டிற்கு

தெற்கே ஜீவானந்தம் செண்ட்டிரிங் வீடு உள்ளது என்றால் சரிதான். அதற்கும் தெற்கேதான் என் வீடு உள்ளது என்றால் கிழக்கே உள்ளது. ஜீவானந்தம் செண்ட்டிரிங் வீட்டிற்கு கிழக்கே என் தாயார் அமராவதி வீடு உள்ளது என்றால் என்வீடு உள்ளது. அந்த வீட்டின் தெற்குபுரத்தில் தெய்வேந்திரன் வீடு உள்ளது என்றால் சரிதான். கிழக்குபுறத்தில் சின்னத்தம்பி வீடு உள்ளது என்றால் சரிதான். சின்னத்தம்பி வீட்டிற்கும் என் வீட்டிற்கும் இடையில்தான் தெய்வேந்திரன் அவரது வீட்டிற்கு செல்லும் வீடு உள்ளது என்றால் வேறு பாதையும் உள்ளது, அதில் பெரியப்பா வீடு கட்டியதால் என் பாதை வழியாக செல்கிறார். அந்த பாதை 2 அடி இருக்குமா என்றால் 1 அடி இருக்கும். வழக்கு சம்பவத்தை பற்றி எனக்கு எதுவும் நேரடியாக தெரியாது என்றால் சரிதான். தார் ரோட்டின் அருகே பள்ளம் உள்ளது என்றால் முன்னால் இருந்தது, இப்போது இல்லை. என் பையன் பெயர் புவனேஸ்வரன். என் மனைவி பெயர் சந்திரா என்றால் அவர் என் 2வது மனைவி, பூமாலை என் முதல் மனைவி. பூமாலை என்மீது வழக்கு தொடர்ந்து இந்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் வழக்கு முடிந்து தற்போது நாங்கள் சமாதானமாகி தற்போத என் வீட்டில்தான் இருக்கிறார். அ.சா.3 சத்யா, அ.சா.5 அழகு என் உறவினர்கள் என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் என் மனைவி அ.சா.1ஐ அடிக்கவில்லை என்றாலும், அவர் சகோதரர் முருகதாசும், அவரது தாயாரையும் நாங்கள் அடித்ததால் அவர்கள் சிகிச்சையிலிருந்த காலகட்டத்தில் தெய்வேந்திரனை அந்த வழியாக போகக்கூடாது என்று சொல்லி அவரது காலில் கல்லைபோட்டு காயப்படுத்தினோம் என்றாலும் அதனால் அவர் 3 கி.மீ. நடந்தே வந்து காவல் நிலையத்தில் வந்து புகார் கொடுக்க சென்றார் அதை பார்த்த நாங்கள் மேலவளவு காவல் நிலையம் சென்றால் எங்கள்மீது நடவடிக்கை எடுப்பார்கள் என்று என் மனைவி அ.சா.1ஐ மேலூர் அரசு மருத்துவமனையில் காயம்பட்டதாக அனுமதித்தோம் என்றாலும் என் செல்வாக்கை பயன்படுத்தி புகார் கொடுக்க சென்றவரை காவல் நிலையத்திலே காவலில் வைக்க செய்தோம் என்றால் சரியல்ல. நாங்கள் சிகிச்சையில் சேர்ந்தபோது தெய்வேந்திரனின் அண்ணன், அம்மாவும் சிகிச்சையிலிருந்தார்களா என்றால் இல்லை, அவர்கள் அங்குதான் சிகிச்சையிலிருந்தார்கள் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்து போலீசார் எவ்வளவு நாள் கழித்து விசாரித்தனர் என்றால் மருத்துவமனையில் இருந்தபோது விசாரித்தனர். அதன்பின்பு விசாரிக்கவில்லை. அ.சா.1-க்கு ஏற்பட்ட காயம் தெய்வேந்திரனை நாங்கள் தாக்கும்போது பொதுமக்கள் தடுத்ததில் அ.சா.1க்கு ஏற்பட்ட சிறாய்ப்பு

காயம் என்றால் சரியல்ல. முருகதாஸ் எங்கள்மீது கொடுத்த புகாரிலிருந்து தப்பிபப்பதற்காக எதிரிமீது பொய்யாக புகாா் கொடுத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.